**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 445/2023**

பெயர் : சதீஷ்பாபு (PW1) (Cross continuation)

த/க/பெ. :

தேதி : 04.01.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>10,11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1 முதல் 8 பிரதிவாதிகள் என் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். 9 வது பிரதிவாதி இடத்தை வாங்கி உள்ளவர் என்றால் அவர் வேறு நபரிடம் தான் வாங்கி உள்ளார். தாவா சொத்து எங்கள் மூதாதையர் சொத்து என்று வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். 1 முதல் 8 பிரதிவாதிகள் என் சகோதர சகோதரிகளுக்கு எதிராக பாகபிரிவினை பரிகாரம் கோரியுள்ளேன் என்றாலும் 10, 11 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். நான் பதிவு செய்து கொடுக்க வில்லை என்பதால் அவர்களை சேர்த்துள்ளேன். எங்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பிரச்சனையில் 10, 11 பிரதிவாதிகள் தேவையற்ற தரப்பினர்கள் என்றாலும் அவர்களை சேர்த்ததால் 10, 11 பிரதிவாதிகள் எதிராக தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு 11ம் பிரதிவாதி அலுவலகத்தில் உரிய ஆவணங்களை தாக்கல் செய்து பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றாலும் 11ம் பிரதிவாதி உரிய சட்ட நடைமுறையை பின்பற்றி சொந்த விருப்பு இன்றி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் நான் பதிவு செய்து கொடுக்கவில்லை.